ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/89 - 2022 අප්‍රේල් මස 02 වැනි සෙනසුරාදා - 2022.04.02

*2273/89 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.சீ.எவ் 1/64*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

16 ஆம் பிரிவின்கீழான ஊரடங்குக் கட்டளை

இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளில் பொது ஒழுங்கமைதியை பேணுவது அவசியமாகவுள்ளதென நான் கருதுகின்றேன். ஆதலால், சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, ஆளெவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அல்லது பொலிஸ் தலைமையதிபதியினால் அல்லது இவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் வழங்கப்பட்ட எழுத்திலான அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, 2022, ஏப்பிறல் 02 ஆந் திகதி 18.00 மணி தொடக்கம் 2022, ஏப்பிறல் 04 ஆந் திகதி 06.00 மணி வரை அத்தகைய இடப்பரப்பில் ஏதேனும் பொது வீதியில், புகையிரதப் பாதையில், பொதுப் பூங்காவில், பொதுப் போக்குவரத்து மைதானத்தில் அல்லது வேறு பொது மைதானத்தில் அல்லது கடற்கரையில் இருத்தலாகாதென இக்கட்டளைமூலம் பணிக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

கொழும்பு,
2022, ஏப்பிறல் 02.

1A - G 36542 — 370 (2022/04)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*கொழும்பு நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*கம்பஹா நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*களுத்துறை நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*கண்டி நிர்வாக மாவட்டம்*

*மாத்தளை நிர்வாக மாவட்டம்*

*நுவரெலியா நிர்வாக மாவட்டம்*

*காலி நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*மாத்தறை நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*கிளிநொச்சி நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*மன்னார் நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*வவுனியா நிர்வாக மாவட்டம்*

*முல்லைத்தீவு நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*மட்டக்களப்பு நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*அம்பாறை நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*திருகோணமலை நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*குருநாகல் நிர்வாக மாவட்டம்*

*புத்தளம் நிர்வாக மாவட்டமும் அத்தகைய மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளும்*

*அநுராதபுர நிர்வாக மாவட்டம்*

*பொலன்னறுவை நிர்வாக மாவட்டம்*

*பதுளை நிர்வாக மாவட்டம்*

*மொனறாகலை நிர்வாக மாவட்டம்*

*இரத்தினபுரி நிர்வாக மாவட்டம்*

*கேகாலை நிர்வாக மாவட்டம்*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.